பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 08 சனிக்கிழமை 21.03.2020 | கதிர் 04




ஆராதனை நடத்திய போதகர்



அருகில் அவர் தங்கியிருந்த வீடு



ஆராதனை நடந்த தேவாலயம்

# யாழ்ப்பாணத்திற்குள்ளும் ஊடுருவியது கொரோனா?

## சுவிஸிலிருந்து வந்து திரும்பிய மத போதகருடன் இங்கு உள்நுழைந்து கால் பதித்ததாகச் சந்தேகம்

### செம்மணித் தேவாலயத்தில் அவருடன் ஆராதனையில் பங்குபற்றிய சகலரையும் தேடிப்பிடிக்கத் தீவிர முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச்21

யாழ்ப்பாணம், அரியாலை – செம்மணி பகுதியில் அமைந்துள்ள பிலதெல்பியா மிஷனரி தேவாலயத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற விசேட ஆராதனைகளின் போது அதனைத் தலைமை தாங்கி நடத்தி வைத்த மதபோதகர் சுவிஸிலிருந்து அச்சமயம் கொரோனா தொற்றுடன் வந்தவர் என்ற அதிர்ச்சித் தகவல் இன்று காலை ஊர்ஜிதப்படுத்தப்பட்டதை அடுத்து, முழு யாழ்ப்பாணமும் பீதியில் மூழ்கியது.

பக்கம் 07

## ஆராதனையில் பங்கேற்ற அனைவரையும் அடையாளப்படுத்த ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 21

சுவிற்சர்லாந்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இங்கு ஆராதனை நடத்தி விட்டு மீண்டும் நாடு திரும்பிய பிலதெல்பியா தேவாலயப் போதகருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதனையடுத்து அவரது ஆராதனையில் கலந்துகொண்டோரை அடையாளப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெனியா தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 15) சுவிஸ்

பக்கம் 07

## போதகருடன் பழகியவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை!

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள பிலதெல்பியா மினரி சபை தேவாலயத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற ஆராதனைகள் மற்றும் மத நிகழ்வுகளில் கலந்துகொண்ட சுமார் 150 பேரை தனிமைப்படுத்திக் கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள்

பக்கம் 07

## ஆண்களை குறிவைத்த கொரோனா தொற்று!

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 81 சதவீதமானோர் ஆண்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொற்றுநோயியல் பிரிவு நேற்று இரவு 8.30 மணியளவில் வெளியிட்டுள்ள புள்ளி

பக்கம் 07

## இன்று எவரும் இல்லை!

கொழும்பு, மார்ச் 21


நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் காரணமாக 245 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

அத்துடன், இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி வரை நாட்டில் கோரோனா தொற்றுக்

பக்கம் 07

## மதபோதனையில் பங்குபற்றியோரை சுயதனிமைக்கு உட்படக் கோரிக்கை

யாழ்.செம்மணி – இளைய தம்பி வீதியில் உள்ள தேவாலயத்தில் மதபோதனையில் கலந்து கொண்டவர்கள் முடிந்தளவு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறும், கொரோனாத் தொற்றுத் தொடர்பான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக யாழ்போதனா வைத்தியசாலையில் தம்மை பரிசோதனைக்குட்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.



யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளார் வைத்தியர் த.சத்தியமூர்த்தி மற்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாள்

பக்கம் 07

## கிளிநொச்சியிலும் கொரோனா மையம்

### 175 யாத்திரிகர்கள் தங்கவைக்கப்பட்டனர்

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி இரணைமடு விமான நிலையப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப் படுத்தல் நிலையத்தில் 175 யாத்திரிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இன்று காலை இந் நிலையத்துக்கு அழைத்து

பக்கம் 07

## செம்மணி ஆராதனைக்குச் சென்ற அனைவருக்கும் விசேட அழைப்பு

யாழ்.செம்மணி, இளைய தம்பி வீதியில் உள்ள பிலதெல்பியா தேவாலயத்தில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் உடனடியாக தங்கள் பெயர், முகவரியைப் பதிவு செய்யுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளார் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி இந்தத் தேவாலயத்தில் வெளிநாட்டிலிருந்த வந்த மதபோதகர் ஒருவரினால் நடத்தப்பட்ட ஆராதனையில் கலந்து கொண்ட இருவர் கொரோனா தொற்று சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பக்கம் 07

# கேப்பாபுலவு விமானத்தளத்தில் இந்தியாவிலிருந்து வந்த 41 பேர்!



## கொரோனா அவதானிப்புக்காக தடுத்துவைப்பு



முல்லைத்தீவு, மார்ச் 21

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தளம் கொரோனா தனிமைப்படுத்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வருகை தந்த ஒரு தொகுதியினர் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களில் 29 பெண்களும் 12 ஆண்களும் ஆக 41 பேர் நேற்று மாலை அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களை 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் கொரோனா பரிசோதனை நிலையங்கள் அமைப்பதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# ஊரடங்கினால் மலையகத்தின் பிரதான நகரங்கள் முடங்கின!






ஹற்றன், மார்ச் 21

நாடு முழுவதும் பொலிஸ் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்று மாலையுடன் மலையகத்திலுள்ள பிரதான நகரங்கள் முற்றாக முடங்கின.

நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன.

பாதுகாப்புத் தரப்பினரின் பணிப்புரைகளை பின்பற்றி, மக்களும் வீட்டுக்குள்ளேயே முடங்கியதால் பிரதான நகரங்கள் வெறிச்சோடி காணப்பட்டன.

ஹற்றன், பொகவந்தலாவ, மஸ்கெலியா, நோர்வூட், வட்டவளை, கினிகத்தேனை, நுவரெலியா, இராகலை, வலப்பனை, நல்லத்தண்ணி, நோட்டன் பிரிட்ஜ், திம்புள்ள – பத்தன, பூண்டுலோயா மற்றும் கொத்மலை, ஹங்குராங்கெத்த ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகரங்களில் ஊரங்குச் சட்டம் முழுமையாக பின்பற்றப்பட்டிருந்தது.

ஹற்றன் நகரில் இன்று ஹற்றன் நகரம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக கிருமி ஒழிப்பு நாசினி தெளிக்கப்பட்டது.

மேலும், அத்தியாவசிய சேவைகளாகக் கருதப்படும் மருத்துவம், மின்சாரம், நீர்வழங்கல் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய பணியாளர்கள் இன்றைய தினம் பணியில் ஈடுபட்டிருந்தனர். வைத்தியசாலைகள் இயங்கினாலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன

# கொரோனா வைரஸை ஒழிக்க பொறுப்புடன் செயற்படுவோம்

## கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் அழைப்பு

கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு, பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரன் அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

சீனாவில் ஆரம்பித்த கொரோனா எனப்படும் கொவிட் –19 வைரஸ் தொற்றுநோயானது தற்போது உலகம் பூராகவும் உக்கிரமாக பரவத் தொடங்கியுள்ளது. இதன் தாக்கம் தற்போது எமதுநாட்டிலும் ஏற்படத் தொடங்கியுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இந்நோய் பரவலைத்தடுக்க அரசாங்கம் கடுமையான வேலைத்திட்டங்களை நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இன்றுவரை கிட்டத்தட்ட 72க்கு மேற்பட்டோரை இந்நோய் தாக்கியுள்ள நிலையில் அரசால் மாத்திரம் இந்த ஆட்கொல்லி வைரஸ் பரவலை தடுத்துவிட முடியாது. வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு மக்களாகிய எமது பூரண ஒத்துழைப்பு மிகமிக அவசியம். ஆகவே அரசால் விடுக்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை சரியான முறையில் பின்பற்றி இந்த ஆட்கொல்லி வைரஸின் பரவலைத் தடுக்க வேண்டும்.

மக்கள் ஒன்றுகூடுமிடங்களை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுங்கள். நாடு முழுவதும் ஊரடங்கு அமுலில் இருக்கும் சந்தர்ப்பங்களில் வீடுகளில் தங்கியிருங்கள். வெளியில் நடமாட்டத்தை இயன்றளவு குறைத்துக் கொள்ளுங்கள். அத்துடன் அரசின் உத்தியோகபூர்வ செய்திகளுடன் இணைந்திருங்கள். மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை வீட்டிலிருந்தவாறே மேற்கொள்ள பெற்றார்கள் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

மேலும் தனிநபர் சுகாதாரத்தை கடைப்பிடியுங்கள். ஒவ்வொரு தனிமனிதனினதும் பொறுப்புணர்வான செயற்பாடுகள் மூலம் இந்நோய்ப் பரவலை தடுக்க திடசங்கற்பம் பூணுவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மட்டக்களப்பு அமைதியானது

மட்டக்களப்பு, மார்ச் 21

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஸ்தம்பித் துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வைத்தியசாலைகள் தவிர்ந்த அனைத்து பிரிவுகளும் முடங் கியுள்ளதுடன் மக்கள் வீட்டுக்குள் முடங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸாரும் இணைந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டுவருவதுடன் அரசின் செயற்பாடுகளுக்கு மட்டக்களப்பு மக்கள் பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்து மக்களும் வீடுகளில் முடங்கியுள்ளதையும் காணமுடிகின்றது. (ஐ)





# வெறிச்சோடியது வடக்கு!

## மன்னார் முடங்கியது







மன்னார், மார்ச் 21

மன்னார் மாவட்ட மக்கள் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்திற்கு நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

இன்று சனிக்கிழமை காலை முதல் மன்னார் மாவட்டம் மக்கள் நடமாட்டம் இன்றி அமைதியான முறையில் காணப்படுகின்றது.

பொலிஸார்,இராணுவம் மற்றும் கடற்படையினர் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அவசர தேவைகளுக்காக ஒரு சில இடங்களில் தனித்தனியே மக்களின் நடமாட்டம் இடம் பெற்றது. எனினும் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் துரித நடவடிக்கைகளைமேற்கொண்டனர்.

குறிப்பாக வைத்திய சேவை உட்பட அவசிய தேவைகளுக்கு செல்கின்றபோது பொலிஸார் சோதனை நடவடிக் கைகளை மேற்கொண்டு உரிய நடவடிக் கைகளை முன்னெடுக்கின்றனர்.

மக்கள் பாதுகாப்புத் தரப்பினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். வேறு மாவட்டங்களில் இருந்து மன்னார் நகருக்குள் வருகின்ற வாகனங்கள் தொடர்பாக பொலிஸார் கூடிய கவனம் செலுத்தினர்.

## இலங்கையில் அதிகரித்துவரும் தனிமைப்படுத்தல் மையங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுபவர்களுக்குச் சிகிச்சை வழங்கும் மத்திய நிலையமாக ஹோமாகம ஆதார வைத்தியசாலை அறிவிக்கப்பட்டுள்ளது.

உடன் அமுலாகும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க ஆகியோரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த அறுவைச் சிகிச்சைகள் உள்ளிட்ட ஏனைய சிகிச்சைகளை நிறுத்தி வைப்பது தொடர்பிலும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணம் ஸ்தம்பித்தது





யாழ்ப்பாணம், மார்ச் 21

நாடு முழுவதும் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டத்தால் இன்று யாழ்ப்பாணம் முற்றாக முடங்கியது.

நேற்று மாலையிலிருந்து எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6 மணி வரை அரசால் நாடு முழுவதும் ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் முற்றாக முடங்கி காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதோடு வீதியால் பயணிப்போர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். யாழ். நகர்ப் பகுதியில் அனைத்து வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டு நகரம் வெறிச்சோடி காணப்படுகின்றது. (ஐ)

## வவுனியா மக்கள் வீடுகளுக்குள்!



வவுனியா, மார்ச் 21

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் முழுமையாக இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊரடங்குசட்டம் காரணமாக வவுனியா மாவட்டம் முற்றாக முடங்கியுள்ளது.

மாவட்டம் தழுவிய ரீதியில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவளை வவுனியா பொலிஸாரால் 8 பேர் கைதுசெய்யபட்டுள்ளதுடன் அவர்களில் 6 பேர் போக்குவரத்து விதிமீறல் குற்றங்களுக்காகவும், இருவர் அவசியமின்றி வீதிகளில் திரிந்தமைக்காவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அம்புலன்ஸ் விபத்து சாரதி உயிரிழப்பு!

### உதவியாளர் காயம்

கொழும்பு, மார்ச் 21

குருணாகல் – கொக்கரெல்ல பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த அம்புலன்ஸ் வாகனம் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொக்கரல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருணாகலை – தம்புள்ளை வீதியில் இன்று சனிக்கிழமை அதிகாலை 1.45 மணியளவில் கொக்கரல்ல வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வாகனம் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதன்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்துள்ள அம்புலன்ஸ் வீதியை விட்டு விலகி தூண் ஒன்றில் மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சாரதியும் சாரதியின் உதவியாளரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சாரதி உயிரிழந்துள்ளார்.

மெதகம – தெஹியத்தக்கண்டிய பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த சாரதியின் உதவியாளர் பொல்கொல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கரல்ல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# தமிழக - கேரள எல்லைகள் கொரோனா அச்சத்தால் மூடல்



கோவை, மார்ச் 21

கொரோனா வைரஸ் தொற்று தீவிரமாகப் பரவி வருவதால் தமிழக -- கேரள எல்லைகள் நேற்று மாலை 6 மணி முதல் மூடப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று, கேரளாவில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்துக்கு அடுத்தபடியாக இங்கு நோய்த் தொற்று அதிகமாக உணரப்பட்டுள்ளது.

கேரளாவில் இதுவரை 25 பேருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. 31,173 பேர் கண்காணிப்பில் உள்ளனர். அதில், 237 பேர் மருத்துவமனையில் தங்க வைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றனர்.

கொரோனா பாதிக்கப்பட்ட மூவர் பஸ், சேர் ஆட்டோ மற்றும் ரயில்களில் கேரளத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றதால், கொரோனா வைரஸ் தொற்று கேரளாவில் வேகமாகப் பரவி வருகின்றது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனால், தமிழகம் கோவையில் இருந்து கேரளா செல்லும் பஸ்கள் நிறுத்தப்பட்டன. தமிழக – கேரள எல்லையில் உள்ள செக்போஸ்ட்களில் மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டு, தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் கேரளாவில் பறவைக்காய்ச்சல் எனப்படும் எச் 1 என்1 வைரஸ் தொற்றும் பரவத் தொடங்கியுள்ளது.

இதையடுத்து, கொரோனா வைரஸ் தொற்று மற்றும் பறவைக் காய்ச்சல் அபாயம் இருப்பதால், தமிழக – கேரள எல்லைப்பகுதியை முழுமையாக மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

# நாள்தோறும் 1 கோடி முக கவசம் தயாரிப்பு

## மத்திய அரசு தகவல்



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் நீடிக்கும் நிலையில், நாள் ஒன்றுக்கு ஒரு கோடி முக கவசங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற மாநிலங்களவையில் ஒரு கேள்விக்கு பதில் அளித்த மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை இணை மந்திரி மான்சுக் மண்டாவியா இத் தகவலை தெரிவித்தார்.

மருந்துகள், கிருமிநாசினிகள், முக கவசங்கள் ஆகியவற்றுக்கு பற்றாக்குறை இல்லை என்றும் அவர் கூறினார்.

மிழ்நாட்டில் 4 மீன்பிடி துறைமுகங்களுக்கான பணி நடந்து வருவதாக தி.மு.க. உறுப்பினர் பி.வில்சன் எழுப்பிய கேள்விக்கு மத்திய மீன்வளத்துறை மந்திரி கிரிராஜ் சிங் பதில் அளித்தார்.

# 6 மாதங்களுக்கு இலவச அரிசி மேற்குவங்கத்தில் அறிவிப்பு

கொரோனா பாதிப்பை அடுத்து மேற்கு வங்க மாநிலத்தில் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படும் மாதாந்த குறைந்த விலை நிவாரணப் பொருள்கள் அடுத்த 6 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று மேற்குவங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

இந்தியாவிலும் கொரோனா தொற்றுப் பரவி வருவதை அடுத்து அங்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக வறிய மக்களின் வருமானம் இழக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மேற்குவங்க மாநிலத்தில் 2 ரூபாய்க்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்த நிவாரண அரியை இனிவரும் 6 மாதங்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு மம்தா தீர்மானித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:–

பொது விநியோக திட்டத்தின் மூலம் நிவாரணக் கடைகளில் இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் ஒரு கிலோ அரிசி அடுத்த 6 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப் படும்.

மேற்குவங்காள அரசு மாநில நிவாரண நிதி கணக்கை ஆரம்பிக்க உள்ளது. இந்தக் கணக்கு மூலம் கொரோனாவை எதிர்கொள்ள மாநில அரசுக்கு மக்கள் நிதி உதவி வழங்கலாம்.

மேலும் மாநில அரசு ஊழியர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப் படுவார்கள்.

மக்கள் தன்னிச்சையாக வீடுகளிலேயே இருக்க வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்த கருத்தை நாங்கள் வரவேற்கிறோம். கொரோனா வைரசுக்கு எதிரான போராட்டத்தில் நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# பட்டாசு ஆலை வெடித்ததில் 6 பேர் மரணம்

சென்னை, மார்ச் 21

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே சிப்பிப்பாறையில் செயல்பட்டு வரும் பட்டாசு தொழிற்சாலையில் நேற்று ஏற்பட்ட வெடி விபத்தில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

படுகாயம் அடைந்த 4 தொழிலாளர்கள் சாத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட னர். பட்டாசு ஆலையில் எரியும் தீயை அணைக்கும் பணியில் 2 வாகனங்களில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டனர்.



# நிர்பயா குற்றவாளிகளின் தண்டனை நிறைவேற்றத்தால் நீதி நிலை நாட்டப்பட்டது

## பிரதமர் மோடி கருத்து

புதுடில்லி, மார்ச் 21

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் 2012ஆம் ஆண்டு ஓடும் பஸ்ஸில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த இணை மருத்துவ மாணவி நிர்பயாவின் கொலைக்குக் காரணமான நால்வருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் மூலம் நீதி நிலைநாட்டப்பட்டிருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நிர்பயா வழக்கின் வழக்குக் குற்றவாளிகளான முகேஷ் குமார் சிங், பவன் குமார் குப்தா, வினய் குமார் சர்மா, அக்ஷய் குமார் ஆகிய 4 பேருக்கும் நேற்று காலை 5.30 மணிக்குத் திஹார் சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

2013ஆம் ஆண்டே இவர்களுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டபோதும் அது நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. குற்றவாளிகளின் மேன்முறையீடுகள், கருணை மனுக்கள், மனித உரிமை ஆர்வலர்களின் எதிர்ப்பு என்பவற்றால் இந்த நிலை நீடித்து வந்தது. ஆனால் குற்றவாளிகள் தூக்கிலிடப்படவேண்டும் என்று பொரும்பாலான மக்கள் ஆதரவு தெரிவித்து வந்தனர்.

இதற்கிடையில், அனைத்து சட்ட வாய்ப்புகளும் வழங்கப்பட்ட பின்னர் நிர்பயா குற்றவாளிகள் 4 பேருக்கும் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் டெல்லி திஹார் சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

நிர்பயா குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதையடுத்து பலர் இனிப்புகளை வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிர்பயா குற்றவாளிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர்,



பிரதமர் மோடி தனது கருத்தை டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

"நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. பெண்களின் கண்ணியத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வது மிகவும் முக்கியமான ஒன்று. நமது பெண்களின் சக்தி எல்லா துறைகளிலும் சிறப்பாக உள்ளது. பெண்களின் முன்னேற்றத்தை மேம்படுத்தும் சமத்துவம் மற்றும் சம வாய்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நாட்டை நாம் ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும்" என மோடி தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் 5 ஆவது நபரும் கொரோனாவால் உயிரிழப்பு

## மும்பையில் அனைத்து கடைகளுக்கும் கதவடைப்பு

மும்பை, மார்ச் 21

இந்தியாவில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்திருக்கிறது.

இந்தியாவிற்கு வந்திருந்த இத்தாலியைச் சேர்ந்த 69 வயதான சுற்றுலா பயணியே உயிரிழந்திருக்கிறார். அவருக்கு கொரோனா இருந்தது உறுதி செய்யப்பட்டதையடுத்து அவருக்கு ஜெய்ப்பூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனையடுத்து கொரோனா வைரசுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

மஹாராஷ்டிராவில் மும்பை, புனே உள்ளிட்ட இடங்களில் மேலும் 3 பேருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அந்த மாநிலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்துள்ளது.

கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் பலசரக்குக் கடைகள், மருந்துக் கடைகள் உள்ளிட்ட அனைத்து தனியார் நிறுவனங்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை முற்றுமுழுதாக மூடிவிடுமாறு மகாராஷ்டிரா மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவிலேயே அந்த மாநிலத்தில் தான் அதிகளவில் நோயாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. பொதுப் போக்குவரத்துக்கான பஸ் மற்றும் ரயிலில் இருக்கைகளை அரைவாசியாகக் குறைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் இதுவரை மொத்தம் 275 பேருக்கு கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்களில் 20 பேர் குணமடைந்துள்ளனர்.

# இத்தாலியை அடுத்து ஒரே நாளில் பிரான்ஸில் 108 பேர் உயிரிழப்பு!

## கொரோனாவின் கோரப் பிடியில் தகிக்கிறது ஐரோப்பா



பரிஸ், மார்ச் 21

கொரோனா வைரஸ் பாதிப்பால் இத்தாலியில் ஒரே நாளில் 627 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடான பிரான்ஸிலும் 24 மணி நேரத்திற்குள் இந்த நோயின் தாக்கத்தால் 108 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்டது கொரோனா வைரஸ். எனினும் அங்கு இப்போது கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

இத்தாலி, ஸ்பெயினுக்கு அடுத்தபடியாக பிரான்ஸ் நாட்டிலும் கொரோனா கோரத்தாண்டவம் ஆடிவருகிறது.

ஸ்பெயினில் 833 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். 18 ஆயிரத்து 77 பேர் நோய்த் தொற்றால் பாதிப்படைந்துள்ளனர். தலைநகர் மட்ரிட்டிலேயே அதிகளவு உயிரிழப்பாக 500 பேர் மாண்டுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டில் கொரோனாவுக்கு 24 மணி நேரத்தில் 108 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. இதனால் அந்நாட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 372 ஆக அதிகரித்துள்ளது. மொத்தம் 10 ஆயிரத்து 995 பேருக்கு வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருப்பது அங்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் 24 மணி நேரத்திற்குள் கொரோனாவால் 11 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. 3 ஆயிரம் பேருக்கு அங்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

# 11,500

# வேகமாக அதிகரிக்கிறது சாவு அடங்க மறுக்கும் கொரோனா





லண்டன், மார்ச் 21

கொள்ளை நோயான கொரோனாவின் பாதிப்பால் உயிரிழப்போர் மற்றும் பாதிக்கப்படுவோர்எண்ணிக்கைதொடர்ந்து மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. இறந்தோர் எண்ணிக்கை 11 ஆயிரத்தைத் தாண்டி வேகமாக முன்னேறி வருகின்றது.

இன்று மதியம் வரையில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2 லட்சத்து 76 ஆயிரத்து 500ஆக இருந்தது. இவர்களில் 11 ஆயிரத்து 417 பேர் உயிரிழந்துள்ளனர். 91 ஆயிரத்து 945 பேர் நோய்த் தொற்றிலிருந்து மீண்டு குணமாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்களில் சுமார் 8 ஆயிரம் பேரின் நிலைமை தொடர்ந்தும் மோசமாகவே இருந்து வருகின்றது.

நோய் கண்டறியப்பட்ட சீனாவில் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது நாளாகவும் அங்கு எந்த உயிரிழப்பும் நிகழவில்லை என்று சீன சுகாதாரத்துறை தெரிவித்தது.

இந்த இரண்டு நாள்களிலும் 41 பேருக்குப் புதிதாக நோய்த் தொற்றுக் கண்டறியப்பட்டது என்றாலும் அவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் இருந்து திரும்பியவர்கள் என்றும் அது தெரிவித்துள்ளது.

தற்போது ஐரோப்பிய நாடான இத்தாலியிலேயே மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இன்று அதிகாலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் மட்டும் 627 பேர் அங்கு உயிரிழந்துள்ளனர். புதிதாக நோய்த் தொற்றுக்குள் உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையும் அங்கு அதிகரித்து வருகின்றது. 5 ஆயிரத்து 300க்கும் அதிக மானவர்களுக்குப் புதிதாக நோய்த் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

இதுவரையில் மொத்தம் 4 ஆயிரத்து 32 பேர் அங்கு உயிரிழந்தள்ளனர். இது சீனாவில் உயிரிழந்தவர்களைவிட 777 பேர் அதிகமாக இங்கு உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் நிலையே இருப்பதாக மருத்துவத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஸ்பெயினில் 21ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களில் ஆயிரத்து 93 பேர் உயிரிழந்தள்ளனர். ஜேர்மனி, அமெரிக்கா, ஈரான் ஆகிய நாடுகளில் தலா 20 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஈரானில் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500ஐ நெருங்கிவருகின்றது.

இதுவரை உலகின் 185 நாடுகள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளன.

## கொரோனா அறிவை பகிர்கின்றது சீனா!

உலகிற்கே கொரோனாவை அறிமுகப்படுத்தி வைத்த சீனாவில் இப்போது நோய்த்தொற்று கட்டுக்குள் வந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. கடந்த இரு நாள்களாக அங்கு புதிய உயிரிழப்புக்கள் எவையும் கொரோனாவால் நிகழவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கொரோனாவைக் கையாள்வது குறித்த தனது அறிவு,அனுபவம்என்பவற்றை தெற்காசிய நாடுகளுடன் பகிர்ந்துகொண்டது சீனா.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து விவாதிக்க, இந்தியா, இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள், நேற்றுச் சீனா ஏற்பாடு செய்த வீடியோ கான்பரன்சிங்கில், கலந்து கொண்டார்கள்.

இந்த வீடியோ கான்பரன்சிங் குறித்து இந்தியாவுக்கான சீனாவின் தூதர் சன் வீடோங் தனது டுவிட்டரில் பக்கத்தில், "கொரோனாவைரஸ்பரவலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து, தெற்காசியாவில் உள்ள 10க்கும் மேற்பட்ட நாடுகளுடன், சீனா இன்று வீடியோ கான்பரன்சிங்கை நடத்துகிறது. சீனா தனது நட்பு நாடுகளின் துயர் துடைக்க தன் ஆதரவை அளிக்கும், உதவும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.


## நிலவுக்கு மனிதனை அனுப்பும் திட்டமும் கொரோனாவால் இடைநிறுத்தம்

கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து நிலவுக்கு மனிதனை அனுப்பும் திட்டப் பணிகள் இடைநிறுத்தப்படுவதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா அறிவித்துள்ளது.

நிலவுக்கு மனிதனை அனுப்பும் 'ஆர்டமிஸ்' எனும் திட்டத்தில், நாசா ஈடுபட்டுள்ளது. இதற்கான ரொக்கெட் கட்டுமானபணிகள், நியூ ஆர்லியன்சில் நடந்து வந்தது.

கொரோனா அச்சம் காரணமாக, இந்தப் பணி, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக, நாசா அறிவித்தது.

## சுரங்க வெடி விபத்தில் 7 பாகிஸ்தானியர் சாவு



பாகிஸ்தான் சுரங்கத்தில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 7 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தனர்.

பலுசிஸ்தான் மாகாணம் குவெட்டா நகரத்தின் டிஹரி என்ற பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டுவருகிறது. அந்த சுரங்கத்தில் நேற்று வழக்கம் போல தொழிலாளர்கள் நிலக்கரியை வெட்டி எடுக்கும் வேலையை செய்துகொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக நிலக்கரி சுரங்கத்தில் வெடி விபத்து ஏற்பட்டது. சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் சுரங்கத்திற்குள் சிக்கித்தவித்த 3 பேரை உயிருடன் மீட்டனர். ஆனால் இடிபாடுகளுக்குள் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கொரோனா வைரஸ் அச்சத்தால் கேன்ஸ் படவிழா ஒத்திவைப்பு



பரிஸ், மார்ச் 21

உலகின் மிகச்சிறந்த திரைப்படங்கள், குறும்படங்களை அடையாளப்படுத்தும் பிரபல கேன்ஸ் திரைப்பட விழா இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டை அச்சுறுத்தி வரும் கொரோனா அச்சம்காரணமாகவே இந்த முடிவுஎடுக்கப்பட்டிருக்கின்றது.

பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் கேன்ஸ் திரைப்பட விழா மிகச் சிறந்த படங்களுக்கான உலக அடையாளங்களில் ஒன்று. இந்த ஆண்டு விழா ஒத்திவைக்கப்படுவது குறித்து கேன்ஸ் திரைப்பட விழா ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலகமே பாதிக்கப்பட்டு இருக்கும் இந்த நேரத்தில் கொவிட்19 வைரசால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அதனுடன் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கும் எங்களுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறோம். கேன்ஸ் திரைப்பட விழாவை தள்ளிவைக்க முடிவு எடுத்துள்ளோம்.

இதற்கான சாத்திய கூறுகளை மதிப்பீடு செய்து, பிரான்ஸ் அரசுத் தலைவர்கள், திரைப்பட விழா உயர்மட்ட நிர்வாகிகள், திரையுலக நிபுணர்கள் ஆகியோரிடம் ஆலோசித்து இந்த முடிவை எடுத்துள்ளோம்.

அதேநேரத்தில் பிரான்ஸ் அதிபரின் உள் முடக்க உத்தரவை அனைவரும் மதித்து இதுபோன்ற இக்கட்டான சூழலில் ஒட்டு மொத்த உலகத்தோடும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 12ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவிருந்த கேன்ஸ் திரைப்பட விழா ஜூன் மாத இறுதியில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசியம் என்ற குறியீட்டை தூக்கி வீசி எறிந்தவர்கள்

# யாரிடம் வாக்கு கேட்கிறார்கள்?

பனங்காட்டான் கனி

**1989ம்** ஆண்டு மற்றும் 1994ம் ஆண்டு பொதுத்தேர்தல்களில் திருமலையில் படுதோல்வியடைந்த இரா.சம்பந்தனை 2001 ஆம் ஆண்டு கூட்டமைப்பில் இழுத்து வந்து திருமலையில் வேட்பாளராக்கி வெற்றி பெற வைத்திருக்காது விட்டால் அவர் என்றோ அரசியலில் ஓய்வு பெற்றிருப்பார் என்பதை அவரது சகபாடிகளும் பங்காளித் தோழர்களும் மறந்து விட்டார்கள் போலும்!

கொரோனா அச்சுறுத்தல், ஊரடங்குச் சட்டம், நடமாட்டத்தடை, அத்தியாவசிய பொதுவிடுமுறை, கட்சிகளுக்குள் தெரிவுப் போட்டி என்பவற்றுக்கு மத்தியில் இலங்கையின் பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இந்த மாதம் 19 ஆம் திகதி மதியத்துடன் ஒருவாறு முற்றுப்பெற்றுவிட்டது.

வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களை 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தலுடன், தலைமறைவானவர்களை இராணுவம் தேடிப்பிடித்து தூக்கிச் செல்லும் சூழ்நிலையிலும் வேட்புமனுத்தாக்கல் தடையாகவில்லை.

அரச சிவில் நிர்வாகமே இராணுவ மயமாகிவிட்ட நிலையில் கொரோனா தடுப்பு செயலணியின் தலைமை அதிகாரியாக சவேந்திர சில்வாவை ஜனாதிபதி கோட்டாபய நியமித்துள்ளார். அமெரிக்காவின் பயணத்தடைக்குள்ளாகியிருக்கும் இலங்கையின் இராணுவத் தளபதியான அதே சவேந்திர சில்வாதான்.

தேர்தல் பரப்புரைக் காலத்தில் நாடு முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டில் வந்துவிடுமென துணிந்து கூறலாம்.

முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் இடம்பெறாதென்று தேர்தல் ஆணையர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். அனேகமாக அனைத்துக் கட்சிகளும் இந்த கால நீடிப்பை வேண்டி வந்தன.

எப்போது தேர்தல் நடைபெறுமென்பதை கொரோனா தான் தீர்மானிக்க வேண்டுமென்று மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருப்பதை மிகவும் ஆழமாக கவனத்தில் எடுக்க வேண்டும்.

கொரோன பரவல் அடுத்த நான்கைந்து மாதங்களுக்கு நீடிக்குமானால், அனேகமாக ஓகஸ்ட் மாதம் வரை தேர்தலுக்கான சாத்தியம் இல்லை. இந்த நிலையில், 2015 இல் தெரிவான நல்லாட்சி அரசாங்கத்தின் முழுமையான ஆயுட்காலம் (5 வருடம்) ஓகஸ்ட் மாதத்தில் முடிந்துவிடும்.

இவ்வாறான சூழ்நிலையில், இந்த மாதம் 19 ஆம் திகதிவரை ஏற்கப்பட்ட தேர்தல் வேட்புமனுக்கள் காலம் கடந்த பின்னர் செல்லுபடியாகுமா? ஆறு மாதங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்தை முடக்கி வைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டா என்ற பல பிரச்சனைகள் மேலெழும்.

ஜனாதிபதி தமக்குள்ள அதிகாரத்தின் கீழ் நாலரை ஆண்டு முடிவின்போது நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டபடியால், அதனை மீண்டும் கூட்ட அரசமைப்பு இடம்கொடுக்குமா என்ற மறுதரப்புக் கேள்வியும் எழுகிறது.

இப்படியான நெருக்கடிகள் கோட்டாபய விரும்பும் எதேச்சாதிகார ஆட்சிக்கு வாய்ப்பாக அமையக்கூடும். எத்தகைய சூழ்நிலையிலும் மே மாத முற்பகுதியில் தேர்தலை நடத்தினால் அது தமது கட்சிக்கு சாதகமாக அமையுமென அவர் எண்ணுவாராயின், இராணுவப் பாதுகாப்புடன் தேர்தலை நடத்தி நாடாளுமன்ற அதிகாரத்தை இலகுவாக கைப்பற்ற முயற்சிக்கலாமென பரவலான அபிப்பிராயம் அரசியல் நோக்கர்களிடம் உண்டு.

இதனால் அனைத்துக் கட்சிகளும் தங்கள் பரப்புரைகளை ஒரு நாள் கூட தாமதிக்காது ஆரம்பிப்பார்கள் என்பது நிதர்சனம்.

வேட்பாளர் பட்டியல் தாக்கலான மையங்களில் கொழும்பு மாவட்டமே அதிகமானவர்களைக் கொண்டுள்ளது. 17 அரசியல் கட்சிகளும், 23 சுயேச்சைக் குழுக்களும் இங்கு போட்டியிடுகின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரிடமிருந்து பிரிந்து சென்ற ஜனநாயக மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் கொழும்பில் எதிரெதிராகப் போட்டியிடுவது ஒரு வரலாற்று நிகழ்வு.

மஹிந்தவின் பொதுஜனப் பெரமுனவில் அவரது பங்காளிக் கட்சிகளின் பல தலைவர்களும் கொழும்பிலேயே போட்டியிடுகின்றனர்.

இதற்கு அடுத்ததாக, யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிளிநொச்சியை உள்ளடக்கிய இந்த மாவட்டம் தேர்தலில் ஏழு உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இங்கு ஏற்கனவே எம்.பிக்களாகவிருந்த மாவை சேனாதிராஜா, சிறிதரன், சரவணபவன், சுமந்திரன், சித்தார்த்தன் ஆகிய கூட்டமைப்பினரோடு ஈ.பி.டி.பி யின் டக்ளஸ் தேவானந்தா, ஐக்கிய தேசிய கட்சியின் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் மீண்டும் போட்டியிடுகின்றனர்.

ஏழு பேரைத் தெரிவதற்கான இந்தப் போட்டியில் ஏற்கனவே எம்.பிகளாகவிருந்த ஏழு பேரில் யார் யார் தோல்வியடையப் போகிறார்கள்? இங்கு மொத்தம் 330 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய முன்னணி என்பவை கூட்டணியுடன் நேரடியாக மோதும் தமிழ் கட்சிகள்.

மஹிந்த ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன, சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் வேட்பாளர்களை இறக்கியுள்ளன.

திருமலை மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளும், 14 சுயேச்சை அணிகளும் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளன. இங்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை நான்கு மட்டுமே.

இனப்பரம்பலைப் பொறுத்தளவில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் இணைந்து இங்கு பெரும்பான்மையாக மாற்றப்பட்டுள்ளனர். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அவரால் கனடாவிலிருந்து இறக்கப்பட்ட சண்முகம் குகதாசனும் இங்கு போட்டியிடுகின்றனர்.



இவ்விடத்தில் 2001ஆம் ஆண்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எவ்வாறு உருவானது அல்லது உருவாக்கப்பட்டது என்ற வரலாற்றை மேலோட்டமாக சற்றுப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்வதற்கான அரங்காகப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துக்காகவே தமிழ் தேசிய தலைமையான விடுதலைப் புலிகளால் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆங்கில விக்கிபீடியா கூட்டமைப்பை விடுதலைப் புலிகளின் பொலிடிகல் புறொக்சி என்று குறிப்பிடுகிறது.

அதாவது, ஒரு செயலைச் செய்ய தமது சார்பாக ஒருவருக்கு வழங்கும் அதிகாரம் (சார்பாண்மை) என்பது புறொக்சி என்பதன் அர்த்தம். தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் விடுதலைப் புலிகள் என்பதை இது உறுதி செய்கிறது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய நான்கு அணிகளையும் சேர்த்தே கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கினர். தமிழரசுக் கட்சியும், புளொட்டும் அப்போது நேரடியாக இக்கூட்டில் அங்கம் வகிக்கவில்லையென்பதை கவனத்தில் கொள்ளலாம்.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் 2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் கூட்டமைப்பின் சின்னமாகப் பயன்படுத்தப்பட்டது. அவ்வேளை கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சம்பந்தனை விடுதலைப் புலிகள் நியமனம் செய்தனர். அப்போது சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கவில்லை.

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியிலிருந்தோ தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியிலிருந்தோ திருமலையில் எவரும் வெற்றி பெறவில்லை. சம்பந்தன் அத்தேர்தலில் இங்கு போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார்.

2001 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலே சம்பந்தனை மீண்டும் வெற்றிபெறச் செய்து அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது. இதற்கு மூலமாக அமைந்தது விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில் அவர் போட்டியிட்டமை. இல்லையேல், 2000 ஆம் ஆண்டுத் தோல்வியுடன் சம்பந்தன் அரசியலுக்கு முழுக்குப் போட்டிருப்பார்.

இதற்கு முன்னைய இரண்டு பொதுத்தேர்தல்களில் திருமலையில் சம்பந்தன் தோல்வியடைந்தமை பற்றியும் பின்னர் எவ்வாறு ஒருவரது மரணம் இவருக்கு வாய்ப்பளித்தது என்பது பற்றியும் விரிவஞ்சி இங்கு குறிப்பிடவில்லை. தேவை ஏற்படுமாயின் இன்னொரு பத்தியில் சுட்டலாம்.

மீண்டும் கூட்டமைப்பின் ஆரம்பத்தை நோக்கலாம். 2001 இல் கூட்டமைப்பு உருவான சில மாதங்களில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான வீரசிங்கம் ஆனந்தசங்கரி கூட்டமைப்பிலிருந்து விலகியமையோடு உதயசூரியன் சின்னத்தை பயன்படுத்துவதையும் தடுத்தார். இதனால் 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியை கூட்டமைப்பு உள்வாங்கியதுடன், தமிழரசின் வீடு சின்னத்தையும் கூட்டமைப்பின் சின்னமாகப் பயன்படுத்தியது.

அந்த நாள்களில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாதாந்தம் வன்னி சென்று தமிழ் தேசிய தலைமைப்பீடத்துடன் அரசியல் நிலைமைகளை ஆராய்ந்து அதன் வழி செயற்பட்டது வரலாற்றுப் பதிவிலுள்ளது. 2004 ஆம் ஆண்டுத் தேர்தலிலேயே கூட்டமைப்பு தமிழர் தாயகத்தில் 22 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்றதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

2009 இல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கூட்டமைப்பு முன்னுக்குப் பின் முரணான போக்கை கடைப்பிடித்ததுடன், தமிழ் தேசிய சிந்தனையை ஏற்காதவர்களையும், துரோகமிழைத்தவர்களையும் உள்வாங்கியதால் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழக்கத் தொடங்கியது.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற கொள்கைகளை கைவிட்டு, ஒன்றுபட்ட ஒருநாட்டுக்குள் தீர்வு என்றும், தனிநாட்டுக் கொள்கையை தமிழ் தமிழ் மக்கள் கைவிட்டு விட்டனரென்றும் கூறி மக்கள் எதிர்ப்பைச் சம்பாதித்தது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையே தமது அறாத் தொடர் கொள்கையாகக் கொண்ட தமிழ் காங்கிரஸை வெளியேற்றியும் மகிழ்ச்சிகொண்டது.

வடமாகாண சபைக்கென வருந்தி அழைத்துக் கொண்டுவரப்பட்ட நீதிபதி விக்னேஸ்வரன் தலைமையிலான இன்னோரணி கூட்டமைப்பின் கொள்கைப் புரட்டலால் விலகிச் சென்றது.

2009க்குப் பின்னர் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறி, அவர்களை அழித்ததற்காக மஹிந்த அரசுக்கு நன்றி கூறிய சம்பந்தன் இப்போது கூட்டமைப்புக்கு வாக்குத் தருமாறு மக்கள் முன் வந்து நிற்கிறார்.


நாடாளுமன்றத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கேட்கும் கோட்டாபயவுக்கும், தங்களுக்கே பெரும்பான்மைப் பலம் தருமாறு தமிழ் மக்களிடம் கேட்கும் சம்பந்தனுக்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?

> 1989 ஆண்டு மற்றும் 1994ம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் திருமலையில் படுதோல்வியடைந்த இரா.சம்பந்தனை 2001 ஆம் ஆண்டு கூட்டமைப்பில் இழுத்து வந்து திருமலையில் வேட்பாளராக்கி வெற்றி பெற வைத்திருக்காது விட்டால் அவர் என்றோ அரசியலில் ஓய்வு பெற்றிருப்பார் என்பதை அவரது சகபாடிகளும் பங்காளித் தோழர்களும் மறந்து விட்டார்கள் போலும்!

# ஊரடங்கால் வெறிச்சோடிய நகரங்கள்

மாங்குளம் நகரம்










முள்ளியவளை










ஒட்டுசுட்டான்










## கிளிநொச்சியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தவர்களில் பெரும்பாலான வர்கள் இந்தியாவுக்குச் சென்ற இலங்கை யாத்திரிகள் எனவும், இவர்கள் 14 நாட்களுக்கு இங்கு தங்கவைக்கப்பட்டு கண்காணிப் படுவார்கள் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மையத்துக்கு கிளி நொச்சி மாவட்ட வைத்திய சாலையின் வைத்திய நிபுணர் ஒருவர் பொறுப்பாக கடமை யாற்றுகிறார் என்று தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட வைத்தி சாலை நிர்வாகம், கொரோனா வைரஸ் தொற்று இனம் காணப் பட்டால் அவர்கள் உடனடியாக அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலை அனுப்பபடு வார்கள் எனவும் தெரிவித்துள் ளனர். (ஐ)

## போதகருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

சுவிஸ நாட்டிலிருந்து வந்து மத போதனையில் ஈடுபட்ட பிலதெல்பியா மினரி சபையைச் சேர்ந்த போதகர் சிவராஜா போல்சற்குணராஜாகொரானோ தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், குறித்தமதபோதகர்பங்குபற்றிய நிகழ்வுகளில் கலந்து கொண் டோர், போதகர் தங்கியிருந்த வீட்டுடன் தொடர்புடையோர், போதகரின் சாரதி ஆகியோரை 14 நாள்களுக்கு கொடிகாமத்தில் உள்ள தனிமைப்படுத்தல் முகா முக்கு அனுப்பி, தனிமைப்படுத் திக் கண்காணிப்பதற்கு நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

## ஆண்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்களின்படி 16 அரச மருத்துவமனைகளில் மொத் தம் 72 உறுதிப்படுத்தப்பட்ட கொரோனாதொற்றுக்குள்ளான நோயாளிகளும், சந்தேகத்துக் கிடமான 218 பேரும் அனுமதிக் கப்பட்டுச் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 45.2 சத வீதமானோர் 41 முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் என் றும் சுகாதார வட்டாரங்கள் தெரி வித்தன. (ஐ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளாகியஎவரும்அடையாளம் காணப்படவில்லை என்றும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

ஒரு வெளிநாட்டவர் (ஜன வரியில் இனங்காணப்பட்ட சீனப் பெண்) மற்றும் 72 இலங் கையர்கள் கோரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமை நேற்று வெள்ளிக்கிழமை வரை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை முற் பகல் 10 மணி வரையான தக வல்களின் அடிப்படையில் சுகா தார மேம்பாட்டுப்பணியகம் இந்தத் தகவலை வெளியிட் டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளாகியமை தொடர்பில் அடையாளம் காணப்பட்ட 72 பேரில் 47 பேர் தனிமைப்படுத் தல் முகாங்களுக்கு வெளியில் உள்ளவர்கள் என்றும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் குறிப் பிட்டுள்ளது. (ஐ)

## ஆராதனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிலிருந்து வருகை தந்த தலைமை போதகரால் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது.

தற்போதுஅவருக்குகொறோனா தொற்று இருப்பது உறுதி செய் யப்பட்டு சுவிஸ் நாட்டில் சிகிச்சை பெறுகிறார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்த ஆராதனையில்கலந்து கொண்ட இருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு மருத்துவ அறிக் கைகளுக்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இவ் ஆராதனை யில் கலந்து கொண்டவர்களுக் கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந் தேகிக்கபடுகிறது.

அந்த ஆராதனையில் கலந்து கொண்ட மக்களை யாழ்ப்பாண பிராந்திய சேவைகள் பணிம னையின் தொடர்பிலக்கத்திற்கு (0212227278) உடனடியாக தொடர்புகொண்டு தங்களது விவ ரங்களை தெரிவிப்பதன் மூலம் மருத்துவ அதிகாரிகள் தொலை பேசி மூலமாகவும் நேரடியாக அவர்களது இடங்களுக்கு செல் வதன் மூலமாகவும் பாதுகாப் பான முன்னெச்சரிக்கை ஒழுங்கு கள் செய்யப்படும்.

இவ்வாறு தம்மை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்து வதற்கான ஒழுங்குகளை செய் வது தங்களுக்கும் தங்களை சார்ந்தவர்களுக்கும் பிராந்தியத்தி லுள்ள இதர மக்களுக்கும் தற் கால கோரோனா வைரஸ் அச் சுறுத்தல் காலத்தில் அவசிய மானதும் பாதுகாப்பானதுமாகும் என்றும் தெரிவிக்கபட்டுள்ளது.

மருத்துவ அதிகாரிகளின் தொடர்புகள் கிடைக்கும் வரை தங்களை இயன்ற அளவில் பாதுகாப்பாக சுய தனிமைபடுத் தலுக்கு உட்படுத்தும் படியும் கோரப்பட்டுள்ளது. - என்றுள் ளது.

## மதபோதனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியகலாநிதிஆ.கேதீஸ்வரன் ஆகியோர் இந்த கோரிக்கையை விடுத்திருக்கின்றனர். கடந்த 15 ஆம் திகதி சுவிஸ் நாட்டிலிருந்து வந்த மதபோதகர் ஒருவர் மத போதனை நிகழ்வை நடாத்தி யிருந்தார்.

இந்த போதனை நிகழ்வை நடாத்திய போதகர் திரும்பி சுவிஸ் சென்ற நிலையில் அங்கு அவர் கொரோனா நோயாளியாக அடை யாளம் காணப்பட்டு சிகிச்சைக் குட்படுத்தப்பட்டிருக்கின்றார். இந்நிலையில் இந்த மதபோதனை யில் கலந்து கொண்டிருந்த வர்கள் தம்மை சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்துமாறும், சந்தேகங்கள் இருப்பின் உடனடி யாக யாழ்.போதனா வைத்தி யசாலையில் பரிசோதனைக் குட்படுத்துமாறும் கேட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த மத போதகருடன் நெருக்கமாகப் பழகிய ஒருவர் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக் கின்றார். இந்த விடயம் அரியாலை பகுதியில் உள்ள மருத்துவர் ஒருவர் ஊடாக போதனா வைத்தி யசாலை பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ் வரன் ஆகியோரின் கவனத்திற் குக் கொண்டு சென்றமையை யடுத்து உடனடியாகக் களத்தில் இறங்கிய அதிகாரிகள், நல்லூர்ப் பிரதேச மருத்துவ அதிகாரி ஜெயக்குமார், பிராந்திய தொற்று நோய்த் தடுப்பு அதிகாரி மருத்து வர் மோகனகுமார் மற்றும் சுகா தார பரிசோதகர், பொலிஸார் என அதிகாரிகள் குழாம் காய்ச் சலால் பாதிக்கப்பட்டுள்ளவரின் வீட்டை சோதனைக்குட்படுத்தி யிருப்பதுடன், முதல்கட்ட ஆய்வு களையும் மேற்கொண்டிருக் கின்றனர். மேலும் குறித்த நபர் அவருடைய வீட்டிலேயே 14 நாள்கள் கட்டாய தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

மேலும் அவருடைய குடும் பத்தாரும் கண்காணிக்கப்படவுள் ளனர்.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆராதனை நிகழ்வில் வேறு பகுதிகளைச் சேர்ந்தவர் கள், வேறு மாவட்டங்களை சேர்ந் தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர். இவர்கள் உடனடியாக தமது பெயர் மற்றும் இருப்பிட விலாசம் என்பவற்றை 0212217278 என்ற தொலை பேசிக்கு உடனடியாக அறியத் தரவும் என அவர் அவசர அறி விப்பு ஒன்றை வெளியிட்டிருக் கின்றார்.

## யாழ்ப்பாணத்திற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந் தேகத்தில் செம்மணி, அரி யாலைப் பகுதியில் நோய்த் தொற்று உள்ளவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரைத் தேடும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

மேற்படி போதகரின் யாழ் பிரசன்னம் பற்றிய தகவல் நேற் றிரவு பரவியதை அடுத்து சுகா தாரப் பகுதியினர், பொலீஸ் மற் றும் இராணுவத்தினருடன் இணைந்து யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: -

யாழ்ப்பாணம், அரியாலை - செம்மணி பகுதியில் அமைந் துள்ள பிலதெல்பியா மினரி தேவாலயத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விசேட ஆராதனை மற்றும் பாடசாலை ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவங் களுக்கென சுவிஸ் பிலதெல் பியா மினரி சபையைச் சேர்ந்த சிவராஜா போல் சற்குணராஜா என்ற மதபோதகர் வருகை தந்தி ருக்கிறார். யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து ஆராதனை நடத்திவிட்டு மீண்டும் நாடு திரும் பிய பிலதெல்பியா தேவாலயப் போதகருக்கு அங்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாகத் தெரியவரு கின்றது.

ஆராதனை மற்றும் மத நிகழ்வுகளுக்கு வருகை தந்த குறித்த மதபோதகர் அரியாலை, இளையதம்பி வீதிப் பகுதியில் தேவாலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் தங்கியிருந் துள்ளார். ஒரே காணியினுள் காணப்படும் மூன்று வீடுகளிலும் மதபோதகர் சாதாரணமாகப் பழகி வந்துள்ளமை இப்போது தெரிய வந்திருக்கிறது.

குறித்த போதகர் யாழ்ப் பாணத்தில் தங்கியிருந்த போது காய்ச்சல் காரணமாக உள்ளூ ரில் சிகிச்சை பெற்றிருந்தமை யும் தெரியவந்ததையடுத்து, குறித்த போதகர் தங்கயிருந்த வீட்டில் உள்ளவர்கள், போதகரு டன் நெருங்கிப் பழகியவர்கள், ஆராதனையில் ஈடுபட்டுள்ளவர் களை இனங்கண்டு தனிமைப் படுத்துவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஊரடங்கு நேரத்தில் இரவில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம், அாயாலை - நாவலடிப் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது, கள்ளுத் தவறணையில் உருவான வாய்த்தாக்கம் மோதலாக மாறி வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்கான ஒருவா உடனடியாக அங்கிருந்தவாகளால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருப்பதுடன், வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றவரை தேடி வருவதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

# வடக்கு மாகாணத்தின் எல்லைகளை மூடுங்கள்

## சிவமோகன் கோரிக்கை



வவுனியா, மார்ச் 21=

வடக்கு மாகாண எல்லைகள் அனைத்தும் மூடப்பட்டு உள்வருவோரும் வெளிச்செல்வோரும் தீவிரமாகக் கண்காணிக்கப் படவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அப்படிச்செய்தால் நாம் பாதுகாக்கப்படலாம் எனவும் இல்லாவிட்டால் நாம் பேரழிவைச் சந்திக்க வேண்டிவரும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். வவுனியாவில் இன்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

உலக அளவில் கொரோனா வைரஸ் தாக்கம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் குறித்த தாக்கத்திற்குள்ளாகியதாக எவரும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் அவ்வாறனவர்களை இனங்காண்பதற்கான வசதிகள் இங்கு உள்ளதா என்ற கேள்வி எழுகின்றது.

குறிப்பாக அதிகமானோர் பாதிக்கப்பட்டால் அவர்களை பராமரிக்கக்கூடிய அதிதீவிரப் பிரிவின் கட்டில்கள் வடக்கில் உள்ளதா என்று பார்க்கவேண்டும். வடக்கில் யாழ். வைத்தியசாலையில் 13 கட்டில்களும் வவுனியா வைத்தியசாலையில் 4 கட்டில்களும் முல்லைதீவில் இரண்டு மற்றும் கிளிநொச்சியில் 3 என மொத்தம் 22 கட்டில்களே வடக்கில் இருக்கின்றன. அவையும் பாவனையில் உள்ளன. இப்படியான சூழலில் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டால் எப்படி மக்களைக் காப்பாற்றப்போகிறோம் என்பது இங்கு பாரிய பிரச்சினையாகும்.

அத்துடன் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை இனங்காணக்கூடிய பி.சி.ஆர். என்ற இயந்திரம் வடக்கில் எங்கும் இல்லை. எனவே வவுனியா மற்றும் யாழ். வைத்தியசாலைகளுக்கு அந்த வசதிகள் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் தற்போது அனைவரும் அணிந்துள்ள முகக் கவசம் கூட தகுதியற்றது. அதனூடாக வைரஸ் இலகுவாக உட்செல்லும் வாய்ப்புள்ளது.

குறித்த வைரஸ், கண்களின் ஊடாகக்கூடச் செல்லும் நிலை உள்ளது. எனவே 'என் – 95' என்ற முகக் கவசமே தரமானது. எனவே வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்குக்கூட அந்த கவசத்தை வழங்கும் நிலையில் இந்த அரசாங்கம் இல்லை. எனவே வைத்தியசாலை ஊழியர்களுக்கும் இது வழங்கப்படவேண்டும். இல்லாவிட்டால் அவர்களூடாகவே இது பரவக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மை இன்றியே செயற்பட்டு வருகின்றது.

வெளிநாட்டுப் பயணிகள் வவுனியா, பலாலி, கேப்பாப்பிலவு, இரணைமடு போன்ற விமானத் தளங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இது தொடர்பான தகவல்கள் எவையும் சுகாதாரப் பிரிவினருக்கு வழங்கப்படவில்லை. சுகாதார வைத்திய அதிகாரிகள் அவர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. நாம் படையினரின் செயற்பாடுகளை மதிக்கின்றோம். எனினும் இது வெளிப்படைத் தன்மையானதல்ல. எனவே மாகாண மட்டத்தில் ஒரு விசேட செயலணி உருவாக்கப்பட வேண்டும். அதில் இராணுவத்தினரும் உள்வாங்கப்பட வேண்டும். அதில் தீர்மானம் எடுப்பவர்களாக சுகாதாரப் பிரிவினர் இருக்க வேண்டும். இராணுவ நகர்வுகள் மூலம் மாத்திரம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது.

அத்துடன், பிரதேச தனிமைப்படுத்தல் முறை உருவாக்கப்படவேண்டும். வடக்கில் தற்போது குறித்த தொற்று எவருக்கும் இல்லை. எனவே மக்களை சுதந்திரமாக வாழவிட்டு வடமாகாண எல்லைகள் அனைத்தும் இராணுவத்தைக் கொண்டு மூடச்செய்யப்பட்டு உள்வருவோரும் வெளிச்செல்வோரும் தீவிரமாககண்காணிக்கபடவேண்டும்' அப்படிசெய்தால் நாம் பாதுகாக்கபடலாம் இல்லாவிடில் நாம் பேரழிவை சந்திக்கவேண்டிவரும் – என்றார். (ஐ)

# ஊரடங்கு விதிளை மீறிய 48 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 21

ஊரடங்கு சட்ட விதிளை மீறிய குற்றச்சாட்டில், இதுவரை 48 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில், நேற்று மாலை 6 மணி முதல் நாடு முழுவதும்ஊரடங்கு சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஊரடங்கு சட்டவிதிகளை மீறிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது.

இதன்படி, பண்டாரவளை, பொரவகலைப் பகுதியில் ஊரடங்கு சட்டவிதிகளை மீறிய குற்றச் சாட்டில் 8 பேர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள் ளனர்.

18 முதல் 56 வயதுகளுக்கு இடைப்பட்ட சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை பண்டாரவளை நீதிவான் முன்னிலையில் இன்று முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹப்புதலை பிரதேசத்தில் நேற்று இரவு உணவு விடுதி ஒன்றினை திறந்து, வியா பார நடவடிக்கைகளை முன்னெடுத்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதுடைய ஹல்துமுல்லபகுதியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்காலைப்பகுதியில், மோட்டார் சைக்கிலில் பயணித்தஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் போது, இவ்வாறு வெளியில் பயணித்த குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

27 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஊரடங்கு சட்டம் அமுலில்இருந்த காலப்பகுதியில் வெளியில் நடமாடிய கட்டுநாயக்க பகுதியில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

43 மற்றும் 44 வயதுகளை உடைய எப்பாவெல, மினுவாங்கொட பகுதிகளை சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி சந்தேகநபர்களை இன்று நீதவான்முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் இமுல்ப்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், அதன் விதிமுறைகளைபின்பற்றுமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, தம்புள்ள பகுதியில் ஊரடங்கு சட்ட விதிகளை மீறி செயற்ப்பட்ட குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25 முதல் 50 வயதுகளுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்கள் பயணித்த வாகனங்களும் பொலீஸாரினால், தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, வலஸ்முல்ல பகுதியில் 4 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டிப்பர் வாகனம் ஒன்றில் பயணித்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்று நல்லதன்னி மற்றும் அம்பாறை பிரதேசங்களில் ஊரடங்கு சட்ட விதிகளை மீறி செயற்பப்பட்ட குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 2 வாரங்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21

நாட்டின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இரு வாரங்களுக்கு ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சன்ன ஜயசுமண அரசிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களின் பொறுப்பற்ற செயல்கள் காரணமாக இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை முழுவதும் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் எதிர்வரும் திங்கட் கிழமை காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே நாட்டின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு இரு வாரங்களுக்கு ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கொரோனா சந்தேக நபராக உள்ள கர்ப்பிணிக்கு குழந்தைப் பிரசவம்!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய சந்தேகத்தில் கொழும்பு காசல் மகப்பேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணி ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை குழந்தை பிரசவித்துள்ளார்.

அந்தப் பெண்ணின் கணவர் இத்தாலியில் இருந்து நாடு திரும்பியுள்ள நிலையில், கொரோனா வைரஸ் அறிகுறிகள் இந்தப் பெண்ணுக்கு ஏற்பட்டதால் அவர் இவ்வாறு காசல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும் அப்பெண்ணின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்படவில்லை எனவும், தற்போது தாயும் சேயும் நலமாக இருப்பதாகவும் காசல் மகப்பேற்று வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் பிரதீப் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

# ஊரடங்கில் களியாட்டம்

## 8 பேர் கைது

கொழும்பு, மார்ச் 21

பண்டாரவளை பகுதியில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளையில் களியாட்ட நிகழ்வுகளில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஹப்புத்தளை பகுதியில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்திருந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2020 இல் வெளியிடப்பெற்றது.